REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 16உ திங்கள் (30—5—55) ★ ★ வெளியூர்: வைகாசி 17உ செவ்வாய் (31—5—55) [இதழ் 298

தென்னாட்டில் பிச்சைக்காரர்கள்!

முறையே 1951, 1931, 1921, 1911 ஆகிய ஆண்டுகளில் கணக்கிடப்பட்ட மக்கள் தொகைக் கணக்குப்படி, தென்னிந்திய மாநிலங்களில் உள்ள பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை வருமாறு:—

சென்னை: 54,671; 1,45,010; 1,91,936; 2,68,673

மைசூர்: 6,127; 17,372; 37,418; 50,531.

தி.-கொ: 8,718; 4,304; 7,172; 8,269.

இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனைக்கு இடி!

ஈடன் சந்திக்கும் முதல் பிரச்சினை!

பிரிட்டனில் மிகப் பெரும் தொழில் நெருக்கடி

70,000 இரயில்வேத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

லண்டன், மே 29—

பிரிட்டனில் இன்று, சுமார் 70,000 இரயில்வே தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

ஏற்கனவே சுமார் 20,000 துறைமுகத் தொழிலாளர்கள் பிரிட்டனின் மிகப் பெரிய முக்கியமான ஆறு துறைமுகங்களைத் தூங்கவைத்துவிட்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இரயில்வேத் தொழிலாளர்கள், சம்பள உயர்வு கோரி மேற்கொண்டிருக்கும் இந்த வேலை நிறுத்தம் மிகப் பெரியதொரு தொழில் நெருக்கடியை உண்டுபண்ணியிருக்கிறது.

1926-ல் நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்திற்குப் பிறகு இப்போது, ஒரே நேரத்தில் இரயில்வேத் தொழிலாளர்களும், துறைமுகத் தொழிலாளர்களும் ஈடுபட்டிருக்கும் இந்த வேலை நிறுத்தமே மிகப் பெரியது எனக் கூறப்படுகின்றது.

லண்டன் துறைமுகத்தில் 126 கப்பல்கள் சோம்பிக் கிடக்கின்றன. 72 கப்பல்களில் மட்டும் தேவைக்கு மிகக் குறைவான ஆட்களைக் கொண்டு வேலை நடக்கிறது.

கடந்த வியாழனன்றுதான் முடிவுற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று பதவியில் அமர்ந்திருக்கும் அந்தோணி ஈடன் தலைமையில் உள்ள கன்சர்வேடிவ் சர்க்கார், இந்த வேலை நிறுத்தத்தை முதல் பிரச்சினையாகச் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

இறுதியாக, வேலை நிறுத்தம் துவங்க 30 நிமிடங்கள் வரை நடைபெற்ற கடைசிப் பேச்சு வார்த்தைகள் கூட வேலை நிறுத்தத்தைத் தவிர்க்கத் தவறிவிட்டன.

இதன் விளைவாக, சுமார் 20,000 மைல் நீளமுள்ள பிரிட்டன் இரயில்வேயில் பணி புரியும் எஞ்

(4-ம் பக்கம் பார்க்க)

அகாலி தளக் கிளர்ச்சி

பெப்சு மாநிலத்தவரும் பங்கு பெறுகின்றனர்

அமிர்தசரஸ், மே. 28—

அகாலி தளத்தவரின் பஞ்சாப் மொழி வழி மாநிலக் கிளர்ச்சியில், இன்று மேலும் 38 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இன்றைய கிளர்ச்சியில் பங்கு பெற்றவரில் 18 பேர்கள், பெப்சு மாநிலத்தில் உள்ள பாட்டியாலா நகரத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் இதரர்கள், பஞ்சாப் மாநிலத்தின் பல மாவட்டங்களிலிருந்தும் வந்தவர்கள் என்றும் கூறப்பட்டது.

இதுவரையில் அமிர்தசரஸ் மாவட்டத்திற்குள் மட்டும் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 792 என்று கூறப்படுகிறது.

'தொழில் துறையில் தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது'

சென்னை சர்க்கார் நியமித்த ஆலோசனைக் குழுவின் கருத்து

சென்னை, மே 30—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கென சென்னை சர்க்கார் தயாரித்துள்ள திட்டங்களின் இலட்சிய எல்லையின் அளவு மிகக் மிகக் குறைவானது; இந்த மாநிலத்தின் நிர்ப்பந்தமான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அந்த அளவு போதுமானது அல்ல;

"பெரும் தொழில்களைப் பொறுத்தமட்டில் சென்னை மாநிலம் வருந்தத்தக்க அளவு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது; சுதந்திரத்திற்குப் பிறகும்கூட சென்னை புறக்கணிக்கப்படுவது, வருந்தத்தக்கதாகும்.

"பெரும் தொழில்கள் நாட்டின் பல பாகங்களிலும் பரவலாக நிறுவப்பட வேண்டுவது மிக அத்தியாவசியமானதாகும்;

"தேவையான எல்லா மூலப் பொருள்களும் கிடைக்கும் இடத்தில்தான் ஒரு தொழில் துவங்க வேண்டுமென்பது

(4-ம் பக்கம் பார்க்க)

52,000 ஆசிரியர்கள் வேலை நிறுத்தம்

10 லட்சம் மாணவர்களுக்கு 'விடுமுறை'

இத்தாலியில் கல்வித் துறை நெருக்கடி

இத்தாலி நாட்டில் உள்ள செகண்டரி பள்ளிகளில் பணிபுரியும் சுமார் 52,000 ஆசிரியர்களும் சம்பள உயர்வுகோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும், இதனால், சுமார் 10 இலட்சம் மாணவர்கள், 'விடுமுறை' அனுபவித்து வருவதாகவும் செய்தி கிடைத்துள்ளது.

இத்தாலியில், இதுவரை எப்போதும் இப்படி ஒரு வேலை நிறுத்தம் கல்வித் துறையில் நடைபெற்றது கிடையாது எனக் கூறப்படுகிறது.

ஆண்டு இறுதிப் பரீட்சைகள் நடைபெற இன்னும் சில நாட்கள் மட்டுமே உள்ள நிலையில், வேலை நிறுத்தத்தை ஆசிரியர்கள் மேற்கொண்டிருப்பது, கல்வி நிலையங்களை வெகுவாகப் பாதித்திருக்கிறதாகக் கூறப்படுகிறது.

வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் எந்த ஒரு செகண்டரி பள்ளி தலைமை ஆசிரியரும் வேலை இழப்பார் என்று அரசாங்கம் அச்சுறுத்தியிருந்ததாம்.

"இப்போது தங்களுக்குக் கிடைத்துவரும் குறைந்தபட்ச சம்பளமான சுமார் 330 ரூபாயுடன் இன்னும் 80 ரூபாய் உடனடியாக சம்பள உயர்வு தர வேண்டும்," என்று, ஆசிரியர்கள் கோருவதாகத் தெரிகிறது.

1956 ஜூலை முதல் சம்பள உயர்வுக்கான திட்டம் ஒன்றை சர்க்கார் முன்பு வைத்ததாகவும், அது, தங்கள் 'கௌரவத்திற்குக் குறைவானது' என்று ஆசிரியர்களின் பிரதிநிதிகள் நிராகரித்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

மக்கள் சபை உறுப்பினர்

கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து ராஜிநாமா

பெர்காம்பூர், (கஞ்சம்) மே. 28—

கட்சியின் அரசியல் கொள்கை, நிர்வாகக் கொள்கை ஆகியவற்றில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளின் காரணமாக, பிஜாய் சந்திரதாஸ் என்ற மக்கள் சபை உறுப்பினர் கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து விலகி விட்டதாகத் தெரிய வருகிறது.

டுனீசிய சுயாட்சி ஒப்பந்தம்

70 ஆண்டுகள் அடிமைத் தளை அகலுகிறது

பாரிஸ், மே. 30—

கடந்த ஒன்பது மாதங்களாக நடைபெற்று வந்த பேச்சு வார்த்தைகளின் விளைவாக, ஏற்கனவே முடிவு செய்யப்பட்டபடி, டுனீசியாவிற்கு சுயாட்சி வழங்குகிற ஒப்பந்தம், பிரெஞ்சுப் பிரதமர் எட்கார் பாரே, டுனீசியப் பிரதமர் தாஹர்பென் அம்மார் ஆகிய இருவராலும் கையெழுத்திடப்பட்டதாகத் தெரிகிறது.

கடந்த 70 ஆண்டு காலமாக, பிரெஞ்சுப் பாதுகாப்பு நாடாக இருந்துவந்த டுனீசியா இப்போதுதான் விடுதலை பெறுகிறது.

ஆரம்பஆசிரியர் நிலையைஉயர்த்துக

கோரிக்கையை நிறைவேற்றுவதில் காலதாமதம் செய்யாதீர்

அகில இந்திய ஆரம்ப ஆசிரியர் சங்கத் தலைவர் பேச்சு

பூரி, மே 30—

"ஆரம்ப ஆசிரியர்கள் தங்களின் நிலை அங்கீகரிக்கப்பட்டு, வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படவேண்டுமென கோருகிறார்கள்; அவர்களது நிலை உயர்த்தப்படவேண்டுமென்பதை பண்டித நேருவே உணர்ந்து வற்புறுத்தியிருக்கிறார்; என்வே, காலதாமதம் செய்யாமல், ஆரம்ப ஆசிரியர்களின் நிலையை உயர்த்த முயற்சிக்க வேண்டும்."

"தேசப் புனரமைப்பில் ஆரம்ப ஆசிரியர்களின் நிலையை உயர்த்துவது ஒரு முக்கியமான அம்சமாக இருப்பதால், அதில் காலதாமதமேதும் இருக்கக் கூடாது."

—என்று, அகில இந்திய ஆரம்ப ஆசிரியர் சங்கத் தலைவரான எம். வி தாண்டே என்பவர், இங்கு மாநாடு ஒன்றில் சங்கக் கொடியை ஏற்றி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆரம்ப ஆசிரியர்களின் கொடி லட்சோப லட்சம் ஆரம்ப ஆசிரியர்களின் பிரதிநிதித்துவம் பெற்றதென்றும், 'நாட்டுச் சேவையில், தியாக முத்திரையுடன் ஆரம்ப ஆசிரியர்கள் விளங்குகிறார்கள்,' என்பதையும் அந்தக் கொடி கூறுகிறது என்றும் அவர் குறிப்பிட்டதாகத் தெரிகிறது.

4,000 கம்யூனிஸ்டுகள் 300 போலீசாருடன் மோதினராம்!

மேற்கு ஜெர்மனியில் கம்யூனிஸ்டுகளின் ஆயுதந் தரித்த ஆர்ப்பாட்டம்

மேற்கு பெர்லின் நகரில், சென்ற யுத்தத்திற்குப் பிறகு, மிகப் பெரிய தாக்குதல் ஒன்றை கம்யூனிஸ்டுகள் மேற்கொண்டிருக்கின்றனர் எனக் கூறப்படுகிறது.

சுமார் 4,000 கம்யூனிஸ்டுகள், கண்ணீர்ப் புகைக் குண்டுகள், கற்கள், கத்தி, கம்புகள் முதலியனவுடன் சுமார் 300 போலீசாருடன் மோதிக் கொண்டனராம்.

முன்னாள் ஜெர்மன் இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கூட்டமொன்று நடத்திக் கொண்டிருந்த மதுக் கடை ஒன்றிற்குள் இந்த கம்யூனிஸ்டுகள் 'நுழைந்து 'கலாட்டா' செய்தனராம்.

இவர்கள் இந்த தாக்குதலை நடத்துவதற்கு, கிழக்கு ஜெர்மன் பத்திரிகைகளே தூண்டுகோலாயிருந்தன என்றும் கூறப்படுகிறது.

இருதரப்பினரும் மோதிக்கொண்டு கலகம் முற்றிக் கொண்டிருந்த நேரத்தில், அருகில் உள்ள வீடுகளில் வசிப்போர், கலகக்காரர்கள் தலையில் தண்ணீரைக் கொட்டினார்களாம்.

12 போலீசாரும், மற்றும் நான்கு பேர்களும் பலத்த காயங்களுடன், மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனராம்.

கம்யூனிஸ்டு ஆர்ப்பாட்டக்காரர்களில் பலர் பெண்கள் என்றும், இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கலகம் நடத்து கொண்டிருந்தபோதே பல துண்டுப் பிரசுரங்களை வீசியெறிந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்தக் கைகலப்பில் 35-மேற்கு பெர்லின் போலீசார் காயமடைந்தனரென்றும், 5 போலீசாருக்குப் பலமாயமென்றும் கூறப்படுகிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 30—5—'55 திங்கள்

ஐயப்படுகிறார்கள்!

"கோபாலா!"
"ஏன் சார்?"
"எங்கே போறே?"
"கடைக்குப் போறேன்!"
"என்ன வாங்க?"
"பீடி வாங்க!"
"என்ன பீடி?"
"துண்டு பீடி!"
"என்ன பீடி?"
"துண்டு பீடி!"

"காரம், மணம், குணம் நிறைந்த பீடி, எங்கள் துண்டு பீடியே! ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள்; உண்மை விளங்கும்!"

பீடி விளம்பரம் செய்யப்படுவதுண்டு இப்படி, நாட்டில்.

ஆனல்...!

"திட்டம் இதோ, திட்டம்! தித்திப்பான வாழ்வு தரும் திட்டம்! இந்த நாட்டு மக்களின் வாழ்வை மீட்டுத் தரும் திட்டம்—இன்னல் போக்கும் மாமருந்து!" என்றெல்லாம் போற்றித் திருத்தாண்டகம் பாடுகிறார்களே, அந்த 'சர்வ ரோக சஞ்சீவி'யான ஐந்தாண்டுத் திட்டத்திற்கு விளம்பரம் செய்யப்போகிறதாம், இந்தியப் பேரரசு!

திட்டத்திற்கான விளம்பரம், இன்றைய ஆட்சியாளரை ஆதரிக்கும் அத்தனை பத்திரிகைகளாலும் தரப்பட்டு வருகின்றது.

இராஜபுதனப் பாலைவனம், பக்ரா-நங்கலால் சோலை வனமாகிவரும் 'சோபிதம்' செய்திச் சினிமாவாக வருகிறது.

பக்கம் பக்கமாக, பத்திரிகைகள் திட்டங்களைப் பற்றிய முழு விவரங்களையும் படங்களுடன் இலவசமாகவே விளம்பரம் செய்து வருகின்றன.

உழைத்து அலுத்துப்போய், அயர்வு நீங்க—சோர்ந்த மனம் சற்று நிம்மதி பெற சினிமாவிற்குச் சென்றால், அங்கு பண்டிதரின் படம்! அதற்குக் கீழே 'இந்தியாவின் எதிர்காலத்திற்கான ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிதி தாரீர்! சிறு சேமிப்புகளை அரசாங்கத்திடம் சேர்ப்பீர்!' என்ற வாசகங்கள்.

இவையல்லாத, ஐந்தாண்டுத் திட்டத்தின்படி அமைக்கப்படும் தொழில் நிறுவனங்கள் முதலியவற்றிற்குப் பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தக நிறுவனங்கள், 'பக்ரா-நங்கலில் உபயோகிக்கப்பட்ட சிமெண்ட் எங்களுடையது; சிந்திரியில் உபயோகிக்கப்பட்ட மின்சாரக் கருவிகள் எங்களுடையன; சித்தாஞ்சனில் பூசியிருக்கும் வர்ணம் எங்களுடையது,' என்று, வேறு ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறும் தொழிற்சாலைகளுக்குச் சாமான்கள் விற்பதையே தங்கள் வர்த்தகத்திற்கு உபரி மூலதனமாக நினைத்து, பெரும் அளவில் விளம்பரத்தில் ஈடுபட்டுள்ளன.

தபால் முத்திரைகள், தந்தி நமூனுக்கள் முதலியன, ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய விவரங்களைத் தாங்கி வருகின்றன.

இத்தனைக்கும் மேலாக, ஆட்சி பீடத்திலிருப்போர் நாள் தவருமல் மக்களிடம் பேசிக்கொண்டே இருக்கிறார்கள்.

இவ்வளவு பெரும் அளவு விளம்பரமும் திட்டத்திற்குப் போதவில்லையாம்; இந்த அளவு விளம்பரம் கிடைத்தும், மக்களிடமிருந்து நியாயமாக திட்டங்களுக்குக் கிடைக்கவேண்டிய ஆதரவு கிடைக்கவில்லையாம்; அதனல், திட்டம்பற்றி விளம்பரம் செய்வதற்கென்றே ஒரு இலாகாவைத் தோற்றுவித்துள்ளார்களாம்; அதன் மூலம், சுமார் 10 அல்லது 20 கோடி ரூபாய் வரை ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய விளம்பரத்திற்காகச் செலவிடப் போகிறார்களாம், டெல்லி ஆட்சியாளர்!

★

"கண்ணே!"

"கண்ணாளா!"

"'வேதனை வேதனை' என்று நம்மைச் சோதனை செய்துகொண்டிருந்த காலம், மாறிவிட்டது கண்ணே!"

"என்ன சொல்கிறீர்கள் அத்தான்!"

"வெல்லும் வெல்ல மொழியாளே—எதைச் சொல்லுவேன்? என்னைக் கொல்லும் வேல் விழியாளே! வேதனை மிகுந்த நம் வாழ்வு மாற்றியமைக்கப்படுகிறது, கண்ணே!"

"விளக்கமாகச் சொலுங்கள் அத்தான்!"

"வாழ்க்கைக்குத் தேவையான வசதிகள் இல்லை; 'வாழ்கிறோம்' என்ற பெயரளவில் தானே, நாம் இத்தனை நாள் வாடி வதங்கிக் கொண்டிருந்தோம்!"

"ஆம்!"

"இனிமேல்........!"

"இனிமேல் என்ன? இந்திய சர்க்கார் நமது வாட்டத்தைப் போக்கத் திட்டம் தீட்டியிருக்கிறார்கள் கண்ணே!"

"என்ன திட்டம் அது, அத்தான்!"

"அதுதான், ஐந்தாண்டுத் திட்டம்!"

"ஐந்தாண்டுத் திட்டத்தால், எப்படி அத்தான் நம் வாட்டம் நீங்கும்? வாழ்வு மலரும்? இன்பம் பொங்கும்?"

"அதுவா, கேள்! திட்டத்தைச் சரிவர நிறைவேற்றினல், நாட்டின் உற்பத்தி பெருகும்; உற்பத்தி பெருகினல் செல்வம் பெருகும்; செல்வம் பெருகினல் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்; நாமும் மக்கள்தானே! நம்முடைய வாழ்க்கையும் உயரத்தானே செய்யும்!"

"எத்தனை ஆண்டு ஆகும் அத்தான், இந்தத் திட்டம் பலன் தர?"

"எத்தனை ஆண்டா? ஐந்து ஆண்டுத் திட்டமென்று அப்போதே சொன்னேனே!"

"அப்படியானல், ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, இப்போதிருக்கும் வாழ்க்கையிலிருப்பதைப் போன்று, இரண்டு மடங்கு வசதிகளுடன் கூடிய உயர்தரமான வாழ்வு கிடைக்குமா, அத்தான்?"

"அல்ல கண்ணே! இது போன்று இன்னும் மூன்று திட்டங்கள் நிறைவேறினல் தான் கிடைக்கும்!"

"அப்பாடி! அத்தனை ஆண்டுகளா?"

"ஆமாம்; அத்தனை ஆண்டுகள் கழித்தேனும், அப்படி ஒரு வாழ்வை நம்முடைய சர்க்கார் நமக்குத் தருவதற்கு, இப்போதே திட்டமிட்டு வேலை செய்கிறார்கள்—அதுதான் ஐந்தாண்டுத் திட்டம் — தெரிகிறதா?'!

"சரிதான்!"

"எங்கே, நம் வாட்டம் போக—வழி காணும் திட்டம் பற்றி உனக்கு விளக்கியதற்குப் பரிசாக ஒரு....?"

"வேண்டியதுதான்! 'வாழ்வு, பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு,' என்றுதானே சொன்னீர்கள்—அப்போது தருகிறேன்!"

★

இப்படி உரையாடல் கொண்ட நாடகங்கள்—முழு நீள சினிமாப் படங்கள்—'ஆடுவோமே, பள்ளுப் பாடுவோமே! ஐந்தாண்டுத் திட்டம் பற்றிப் பெருமை கொண்டு ஆடுவோமே!' — 'எப்படித் திட்டினரோ? அப்படித் திட்டவே ஆசை கொள்வார் உலகோர்; எப்படித் திட்டினரோ!'—என்று இசைவாணர்கள் தக்க பக்கமேள வாத்தியங்களுடன், தாளம் தவருமல் பாடும் இசை நிகழ்ச்சிகள்—'ஐந்தாண்டுத் திட்டமே, உலக சமாதானத்தின் திறவுகோல்!'—என்பனபோன்ற தலைப்புகளில் கட்டுரைகள் கொண்ட பத்திரிகைகள் ஆகியவற்றின் மூலமாகவெல்லாம் விளம்பரம் செய்யப்போகிறார்களாம்!

'கோபாலா!' 'ஏன் சார்?'—என்ற வகையில் விளம்பரங்கள் அமைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

திட்டத்திற்கு மக்களிடம் ஆதரவு திரட்டுவதற்கு விநோதமான விளம்பரங்களைப் பயன்படுத்த நினைத்து, அதற்காக கோடிக்கணக்கான ரூபாயை விரயம் செய்வதை சரியெனக் கொள்ள முடியாது.

திட்டம், உண்மையில் மக்களுக்கு நன்மை பயப்பன என்பதை மக்கள் உணர்வதற்கு, திட்டம் தீட்டியவர்களின் கடந்த கால அருஞ்செயல்கள் விளம்பரமாக அமைய வேண்டுமே தவிர, 'சினிமா, நாடகம், இசை நிகழ்ச்சி — என்பவற்றினல் அல்ல,' என்பதையும் சர்க்கார் உணர்ந்தாக வேண்டும்.

கிராம மக்கள், அவர்களது உடனடித் தேவைகளும், வசதிகளும் பூர்த்தி செய்யப்படாலே போதுமென இன்றுள்ள நிலையில் எண்ணிக்கொண்டிருக்கும்போது எப்போதோ அவர்களுக்கு வாழ்வு கிடைப்பதற்காக எனச் சொல்லப்படும் திட்டத்திற்காக கோடிக்கணக்கான ரூபாயை விளம்பரத்திற்கென விரயம் செய்வது — அதுவும், இலவசமாகவே ஏராளமான விளம்பரம் கிடைத்து வரும்போது விரயம் செய்வது—நியாயமானதல்ல!

'இந்திய சர்க்காரின் இந்தப் போக்கு, எதிர்நோக்கியிருக்கும் தேர்தலை மனதில் கொண்டதோ!'—என்ற ஐயம் மக்களுக்கேற்படுவதில் தவறில்லை!

27,790 அடி உயரமுள்ள மலைச் சிகரம் பிடிபட்டது

ஜீன் பிராங்கோ என்பவரைத் தலைவராகக் கொண்ட பிரெஞ்சு மலைமேறும் குழு, 27,790 அடி உயர இமயமலைச் சிகரமான 'மாகாளு' சிகரத்தை எட்டிப் பிடித்து விட்டதாக தகவல் கிடைத்திருக்கிறதாம்.

ஆந்திரர் - தமிழர் எல்லைத் தகராறு

'விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வேண்டும்'

முதன் மந்திரி கோபால ரெட்டி கருத்து

கர்னூல், மே. 27—

"சென்னை மாநிலம், ஆந்திர மாநிலம் ஆகியவற்றிடையேயுள்ள எல்லைத் தகராறு விரைவில் தீர்க்கப்படும்; இதில் ஒருவிதத் தொல்லையும் இருப்பதாகத் தெரியவில்லை; ஆனல், இந்தப் பிரச்சினை ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் உணர்ச்சியுடன் ஆராயப்பட வேண்டும்,"

என்று, ஆந்திர பிரதம மந்திரி திரு. பி. கோபால் ரெட்டி கூறியுள்ளார்.

"தகராறுக்குரிய பகுதிகளில் உள்ள மக்கள் தொகை சம்பந்தமான கணக்குகளைத் தயார் செய்வதற்கென நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் தங்கள் வேலையை முடித்தவுடனே அதிகார முறையில் இரு மாநிலங்கட்குமிடையே ஒரு மாநாடு நடத்தப்படும்; பிறகு, அவ்வதிகாரிகளின் மாநாட்டில் செய்யப்படும் முடிவுகளை இரு அரசாங்கங்களும் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வரும்," என்றும் அவர் கூறினர்.

"இப்பிரச்சினையைப் பற்றி நடவடிக்கை எடுக்கையில் இரு அரசாங்கங்களும் சில குறிப்பிட்ட பகுதிகளை ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கத் தயாராயிருக்க வேண்டுவது மிகவும் இன்றியமையாதது; இது சம்பந்தமான எந்த நடவடிக்கையும் மொழி, நிர்வாகம் ஆகியவற்றின் அடிப்படையில் முடிவு செய்யப்படும்; - சென்னை அரசாங்கம், செங்கற்பட்டு மாவட்டத்தில் பெருவாரியாகத் தெலுங்கு மொழி பேசும் மக்கள் வாழும் சில பகுதிகளை ஆந்திரத்திற்கும், ஆந்திர அரசாங்கம் திருத்தணியில் பெருவாரியாகத் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளைச் சென்னைக்கும் கொடுக்க நேரிடலாம்," என்றும் அவர் சொன்னர்.

அவர் இறுதியாக இரண்டு அரசாங்கங்களும் இப்பிரச்சினையைச் சுமூகமான முறையிலும், இருசாரருக்கும் திருப்தியளிக்கக்கூடிய முறையிலும் தீர்க்கும் என்று தாம் நம்புவதாகக் குறிப்பிட்டார்.

நெருக்கடியாகி வரும் கோவா நிலை!

சர்க்கார் பரிசீலித்து வருவதாகத் தகவல்

கல்கத்தா, மே. 27—

கோவா இந்தியாவைச் சேர வேண்டிய பகுதி என்றும், இதனை எவரும் மறுக்க முடியாதென்றும், மக்கள் சற்று பொறுமையாயிருப்பது அவசியம் என்றும் இந்திய சர்க்கார் வெளிவிவகார இலாகா மந்திரி டாக்டர் சையத் முகம்மது கூறியிருக்கிறார்.

நாட்டு மக்கள் இந்தப் பிரச்சினையில் மிகவும் கொதிப்படைந்திருப்பதாகவும், சர்க்கார்மீது நிர்ப்பந்தம் அதிகரித்திருப்பதால் இந்திய சர்க்கார் தங்கள் கொள்கைகளைப் புனர் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

கோவா பிரச்சினையை ஐ. நா.-வுக்கோ அல்லது வேறு எந்த அகில உலக நிறுவனத்திற்கோ, இந்தியா கொண்டு போகாதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கோவாவில் நிலை மிகவும் நெருக்கடியாகியிருப்பதால் அங்கு அறப்போரில் ஈடுபடுவதற்கு கோவாவினர் அல்லாத இந்தியர்களை அனுமதிப்பதா வேண்டாமா என்ற பிரச்சினையை சர்க்கார் பரிசீலித்து வருவதாகவும் சையத் முகமது தகவல் தந்திருக்கிறார்.

★

கவர்னர் - ஜெனரலுக்கு வேட்டு வைக்க!

கோவா சர்க்காரின் அலுவலகத்தில், கவர்னர்-ஜெனரலின் மேஜைக்குள் ஒரு குண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்ததாயும், தற்செயலாக கவர்னர்-ஜெனரல், மேஜை அறையைத் திறந்தபோது குண்டு கண்டுபிடிக்கப்பட்டு, போலீஸ் நிலையத்திற்கு அனுப்பப்பட்டதாயும் இதனை ஒட்டி சர்க்கார் அலுவலகத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகளும், ஒரு காவல்காரரும் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

வரவேற்பளிக்க வேலூர் நகரசபை முடிவு

வேலூர் (வ. ஆ) நகரசபைக் கூட்டம், 25—5—55ல், தலைவர் பி. ஆர். சீதாபதி தலைமையில் நடைபெற்றபோது, தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு ஒரு நல்வரவேற்புத் தர முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

தோழர் எம். பி. சாரதி முன்மொழிய, தோழர் வி. எம் தேவராஜு வழிமொழிய தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காஞ்சியில் முன்னேற்ற நிறுவனம்

கண்கவர் வனப்புகளில் புடவைகள் நெய்யவாம்!

புதுடில்லி, மே 27—

கைத்தறித் தொழில், கைத்தொழில்கள் அபிவிருத்திக்கு இந்திய சர்க்கார் மேற்கொண்டு சகாயத் தொகைகளும், கடனும் வழங்கியிருக்கின்றனர்.

மதுரையிலும், கர்னூலிலும், கைத்தறிப் பட்டுத் துணிகளை விற்பனை செய்வதற்கான டிப்போக்களை ஆரம்பிக்க மைசூருக்கு ரூ. 22,000 மானியமாகக் கிடைத்திருக்கிறது.

அகில இந்திய கைத்தொழில்கள் போர்டு சிபாரிசின் பேரில், சென்னைக்கு ரூ. 1,01,260 மானியமாகவும், ரூ. 47,000 கடனாகவும், அனுமதிக்கப்பட்டிருக்கிறது இத்தொகைகள் சாயப் பொருள் ஆராய்ச்சி சாலை ஒன்றையும், கைத்தறி நெசவு நிறுவனமொன்றையும் நிர்மாணிப்பதற்காக சென்னையிலுள்ள கலாக்ஷேத்திரத்திற்கு அளிக்கப்படும்.

நெடுநாளாக பிரசித்தி பெற்று வந்துள்ள கண்கவர் 'வனப்பு'களில் பருத்திப் புடவைகளையும், பட்டுப் புடவைகளையும் நெய்வதற்காக சென்னை மாநிலத்திலுள்ள காஞ்சீபுரத்தில் முன்னேற்ற நிறுவனமொன்றை நிர்மாணிப்பதற்காக போர்டுக்கு ரூ. 12,100 மானியமாகக் கிடைத்திருக்கிறது. இந்த அனுமதி, இவ்வருட பிப்ரவரியில் அதே தொகைக்கு அளிக்கப்பட்ட அனுமதியை ரத்து செய்கிறது. டில்லியில் ஒரு 'மோஸ்தர்' நிலையத்தை நிர்மாணிப்பதற்காக போர்டுக்கு, ரூ. 11,050 மானியமாக அளிக்கப்பட்டிருக்கிறது.

லிபியா மன்னரின் 3-வது திருமணம்!

தனக்குப் பிறகு 'வாரிசு' வேண்டுமென விரும்பும் 72 வயதான லிபியா மன்னர், 40 வயதுள்ள பெண்மணியை மணந்துகொள்ள முடிவு செய்துள்ளாராம்!

கழகச்செய்திகள்

சென்னை 35-வது வட்ட தி. மு. கழகம்

14—5—55 மாலை 6 மணிக்கு, சென்னை — கோடம்பாக்கத்தில் தி. மு கழகக் கிளையின் 2-ம் ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் தோழர் சோ. கிருட்டிணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. தோழர் க இளங்கீரன், தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர் சி. பி. சிற்றரசு ஆகியோர், சமுதாயம் சீர் திருந்த வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியும், பகுத்தறிவுப் பணி நாட்டிலே பரப்பி, விடுதலைப் பணியை இளைஞர்கள் ஆற்ற வேண்டிய கடமை பற்றியும், பொதுவுடைமை திராவிடத்தில் பூக்க வேண்டிய இலட்சியம் குறித் தும் விரிவுரையாற்றினர்.

சென்னை — சூளை தி. மு. கழக ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்

21—5—55 மாலை, கழக ஐந் தாம் ஆண்டு விழா பொதுக்கூட் டம் தோழியர் சத்தியவாணிமுத்து தலைமையில் நடைபெற்றபோது, தலைவர், 'சோஷலிசம் மாதிரி திட்டம்' என்ற கொள்கையைக் கண்டித்துப் பேசினர். கழகச் செய லாளர் ஆண்டறிக்கை வாசித்தார். முன்னாள் மாவட்ட செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரானைப் பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. புதிய மாவட்ட செயலா ளர் தோழர் இளம்பரிதிக்கு வர வேற்பு மடல் வாசித்தளிக்கப்பட் பட்டது. வரவேற்புக்கு நன்றி தெரிவித்து இளம்பரிதி பேசிய பின், தோழர் சி. பி. சிற்றரசு சமுதாய கேட்டை விளக்கியும், அரசியல் அவல நிலைமை பற்றி யும் விரிவுரையாற்றினர்.

சென்னை 44-வது வட்ட தி. மு. கழகம்

21-5-55 இரவு 9-30 மணிக்கு, கழகப் பணிமனையில் தோழர் ஏ இராதாகிருட்டிணன் தலைமை யில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், தோழர் பி எம். மதி யழகன் தந்தையார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள் ளப்பட்ட பின்னர், 1—3—55-லிருந்து, 30—4—55 வரையுள்ள கழக வரவு - செலவுகள் ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், சென்னை மாவட்ட செயலாளர் தோழர் இளம்பரிதி, முன்னாள் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் ஆகியோருக்கு கழகத்தின சார்பில் தேநீர் விருந்து நடத்துவதெனவும், கழக வளர்ச்சி நிதிக்கான ஏற்பாடு களை அடுத்த செயற்குழுக் கூட்டத் தில் மேற்கொள்ளுவதெனவும் முடிவுகள் செய்யப்பட்டன.

சென்னை 18-வது வட்ட தி. மு. கழகம்

22—5—55 காலை 10 மணிக்கு, கழகப் பணிமனையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், நான் காம் ஆண்டு விழா பொதுகூட்ட வரவு - செலவு கணக்கு சரிபார்க்கப் பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது; கழக பொது உறுப்பினர்களிடம் மாதம் சந்தாவாக 4 அணு வசூலிப் பது என்று தீர்மானிக்கப்பட்டது. தோழர் வி. கே. சண்முகம் அவர் களை செயற்குழு உறுப்பினராக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திருமங்கலம் தி. மு. கழகம்

23—5—55ல், கழக செயற் குழுக் கூட்டம் பகுத்தறிவு இளை ஞர் படிப்பகத்தில் நடைபெற்ற போது, 19—6—55ல் பொதுக் கூட்டம் நடத்துவதென்றும், அதற்கென வசூல் குழு ஒன்று நியமித்தும், மாவட்டக் கழகத் திற்கு! 1—6—55ல் மாநில மாநாடு நிதி அனுப்புவதென்றும் முடிவுகள் செய்யப்பட்டன.

சென்னை 13-வது வட்ட தி. மு. கழகம்

22—5—55 காலை 41, செம்பு தாஸ் வீதியிலுள்ள கழக இல்லத் தில் நடைபெற்ற செயற் குழு கூட் டத்தில், பொதுச் செயலாளராக இரா. நெடுஞ்செழியன் தேர்ந் தெடுக்கப்பட்டதை வரவேற்றும், அரும்பணி ஆற்றிய அண்ணாவுக்கு பாராட்டுதலும் தெரிவிக்கப்பட்ட துடன், சென்னை மாவட்ட செயலாளர் தோழர் இளம் பரிதியை வரவேற்றும், முன்னாள் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரானைப் பாராட்டியும் தீர் மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர், கழக உறுப்பினர்களான தோழர் கா. சு அப்பாதுரை துணைவியார், தோழர் சே. என். சாமியின் அன்னையார் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித் துக் கொள்ளப்பட்டது.

புதுவையில் தி. மு. கிளைக் கழகங்கள் தோற்றம்

15—5—55ல் நடைபெற்ற புதுவைத் தி. மு. கழக செயற் குழுவில், அரியாங்குப்பம் (கொம் முய்ன்) நகரில் நகரக் கிளை அமைத் துக் கொள்ளவும், 22—5—55ல் நடைபெற்ற செயற்குழுவில் கெட் டப்பாக்கம் கொர்முய்ன் கல்மண்ட பம் கிராமத்தில் சிற்றூர்க் கிளை அமைத்துக் கொள்ளவும் அனுமதி தரப்பட்டன.

பம்பாய் தி. மு. க. பொதுக் குழு பிரதிநிதிகள் கூட்டம்

15—5—55 காலை 10 மணியள வில், காந்தவல்லி தி. மு. கழக அலுவலகத்தில் தோழர் எஸ் தியாகராசன் தலைமையில் நடை பெற்றபோது, தோழர் யோ. தர்ம ராசன் வரவு-செலவு கணக்குகள் வாசித்தார். பின்னர், அமைப்புச் செயலாளராக த. மு. பொற்கோ வும், பிரச்சார செயலாளராக எஸ் இராசனும் தேர்ந்தெடுக்கப்பட்ட னர். மாநில மாநாட்டிற்கு நிதி வசூலித்து அனுப்புவதென முடிவு செய்யப்பட்டது.

புதியம்புத்தூர் தி. மு. க.

19—5—55 இரவு 9 மணிக்கு செயலாளர் பெ. துரைசாமி தலை மையில் நடைபெற்ற செயற் குழு உறுப்பினர்கள் கூட்டத்தில், மாவட்டக் கழக தீர்மானப்படி மாநில மாநாட்டுக்கு கழகக் கோட்டா ரூ. 25 உடனடியாக அனுப்புவதென்றும், முன்னாள் பொதுச் செயலாளர் அண்ணா துரை அவர்களுக்கு நன்றி தெரி வித்தும், புதிய பொதுச்செய லாளர் இரா. நெடுஞ்செழி யனை வரவேற்றும், மாவட்டச் செயலாளர் தோழர் கே வி. கே சாமியை வரவேற்றும் தீர்மானங் கள் நிறைவேற்றப்பட்டன.

தக்கோலம் தி. மு. கழகம்

21—5—55-ல் நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில், மே தின விழா வரவு-செலவுகள் ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், ஜூன் மாத முதல் வாரத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவ தெனத் தீர்மானிக்கப்பட்டது.

விருதுநகர் தி. மு. கழகம்

22—5—55 காலை 10-30 - மணிக்கு நாடார் பரிபாலன சங்கக் கட்டிடத்தில் செயலாளர் கே. சுப் பிரமணியன் தலைமையில் நடை பெற்ற கழக உறுப்பினர்கள் கூட் டத்தில், மாநில மாநாட்டுக்கு, மாவட்ட கழகத்தின் வசம், நகர் கழகத்தின் பங்குத் தொகையாக ரூ. 100 அளிப்பதெனவும், புதிய பொதுச் செயலாளராக இரா. நெடுஞ்செழியன் தேர்ந்தெடுக்கப் பட்டதை வரவேற்றும் தீர்மானங் கள் நிறைவேற்றப்பட்டன.

பொள்ளாச்சி நகர தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

22—5—55 மாலை 7 மணிக்கு திருவள்ளுவர் திடலில், தோழர் பி. கே. முத்து தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் ஈ. வெ. கி சம்பத், கோவை செழியன், எஸ் அப்பாவு, க. துரைக்கண்ணன், வால்பாறை ஜெபக்கனி, மதார்சா ஆகியோர் தற்கால அரசியல், மாநில மாநாடு, தொழிலாளர் நிலை ஆகிய பிரச் சினைகள் பற்றிப் பேசினர்.

குடந்தை நகர தி. மு. க.

22—5—55 காலை 10 மணிக்கு கழகச் செயற்குழு கூட்டம் பன் னீர்செல்வம் வாசகசாலையில் நடை பெற்றபோது, 18—6—55-ல், பொதுச்செயலாளர் வரவேற்புக் கூட்டத்தை தோழர் என். எஸ். இளங்கோ தலைமையில் நடத்துவ தென்றும், அன்று காலை நகரில் பல பகுதிகளில் கொடியேற்றுவ துடன் மாலை மாபெரும் ஊர்வலம் நடத்துவதென்றும், தீர்மானிக்கப் பட்டது.

தோழர்கள் எஸ் எஸ். கோவிந்த சாமி தலைமையில் வரவேற்பு குழு வும், கோ. நாராயணசாமி தலைமை யில் கூட்ட, ஊர்வல அமைப்புக் குழுவும், விளம்பரப் பொறுப்புக் கள் துவரங்குறிச்சி இளைஞர் தமிழ் மன்றத்திற்கும் தரப்பட் டது. 8—5—55ல் நடைபெற்ற 'மே' தின கூட்ட வரவு - செலவு ஒத்துக்கொள்ளப்பட்டது.

ஆம்பூர் (வ. ஆ.) தி.மு.க.

22—5—55 காலை 10 மணிக்கு, நகர தி. மு. க. செயற்குழு கூட் டம் தோழர் எ. ஜி. சாமி தலைமை யில் நடைபெற்றபோது, தோழர் கள் என். கணேசன் துணைவி யாரும், இ எம் கிருஷ்ணய்யா தந்தையாரும் இயற்கை எய்திய மைக்கு அனுதாபம் தெரிவித் துக் கொள்ளப்பட்டது.

வனவாசி தி. மு. கழகம்

23—5—55 மாலை 5 மணிக்கு கழக செயற்குழுக் கூட்டம் செய லாளர் ப. சண்முகம் தலைமையில் நடைபெற்றபோது, புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழிய னுக்குப் பாராட்டுதலும், அண்ணா அவர்களுக்கு நன்றியும் தெரிவித் துக் கொண்டும், மாநில மாநாட்டுத் திறப்பாளராக தோழர் ஜி பி. சோமசுந்திரம் அவர்களைத் தேர்ந் தெடுத்தமைக்கு பொதுக் குழுவை பாராட்டியும் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

கீழப்பூங்குடி தி. மு. கழக ஆண்டு விழா

24-5-55-ல், தோழர் இராமு. செங்குட்டுவன் தலைமையில், கழக 4-ம் ஆண்டு விழா நடைபெற்றது தோழர் பெரி. கணேசன் ஆண்டு அறிக்கை வாசித்தார்; தோழர் டி. கே. சீனிவாசன் கழகக் கொடியேற்றி வைத்து விரிவுரை ஆற்றினர்.

சிறுகளப்பூர் தி. மு. க.

25—5—55ல், தோழர் இரா. முத்துசாமி இல்லத்தில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்ற போது, மாநில மாநாட்டிற்கு நன் கொடையாகப் பணம் வசூலித்து அனுப்புவதென்றும், அண்மையில் ஒரு கூட்டம் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

காட்டுச்சேரியில் தி. மு. கழக அமைப்பு

பொறையார் காட்டுச்சேரியில் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் சி. ஜம்பு தலைமையில் நடைபெற்றது. கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின், துவக்க விழாப் பொதுக்கூட்டம் ஜூன் மாதத்தில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

செய்திச் சுருள்

'தேவாலயம்'-துவக்கவிழா

இயலிசை நாடக மன்றத்தின் இரண்டாவது முயற்சியாக தோழர் எஸ். எஸ். தென்னரசு எழுதிய 'தேவாலயம்' நாடகத் துவக்க விழா 22—5—55 ஞாயிறு மாலை, சென்னை—புதுப்பாக்கத்தில் நடை பெற்றது. தோழர் கதிரன் விழா வுக்குத் தலைமை தாங்கினர். தோழர்கள் ஆர். எம். எஸ். முத்து ராமன், எஸ். எஸ். தென்னரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கடலங்குடி வேலாயுதம் மன்றம்

21—5—55 இரவு 8 மணிக்கு தோழர் கே. ஆர். பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற செயற் குழு கூட்டத்தில், பொதுச் செய லாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்றும், அண்ணா அவர்களுக்கு நன்றி தெரிவித்தும் கிளைக் கழக சார்பில் மாநில மாநாட்டுக்கு முடிந்த அளவு தொகையை வசூலிப்பதென்றும், அதற்கென ஐவர் கொண்ட குழு அமைத்தும் முடிவுகள் செய்யப் பட்டன.

சௌந்திரபாண்டியனுர் படிப்பகத் திறப்பு விழா

22—5—55 மாலை 4 மணிக்கு கல்வார்பட்டி பிரிவு ரோடிலிருந்து மாபெரும் ஊர்வலம் சௌந்தர பாண்டியனுர் படிப்பகத்தை வந் தடைந்தவுடன், படிப்பகத் திறப்பு விழா பொதுக்கூட்டம் திரு. ஆ ராசாக் கவுண்டர் தலைமையில் நடைபெற்றது. திரு. எம். ஆர். மத்திரன் படிப்பகத்தைத் திறந்து வைத்தார்; தோழர் வீரராசன் பாண்டியனுர் படத்தைத் திறந்து வைத்தார். தோழர் ஆர். இராம லிங்கம், டி. கோவிந்தசாமி, முத் திருளப்பன் மற்றும் பல தோழர் கள் சொற்பொழிவாற்றினர்.

திருவள்ளுவர் முன்னணிக் கழகம்

26—5—55 மாலை 7 மணிக்கு கழக உறுப்பினர்கள் கூட்டம் சென்னை பெத்து நாய்க்கன் பேட்டை சிவஞானம் பூங்காவில் திரு. தா. கோ. அழகன்பன் தலை மையில் நடைபெற்றபோது, ஆக்கப் பணிக்கான பல முடிவுகள் செய்யப்பட்டன.

வாணியம்பாடி அண்ணா படிப்பகம்

17—5—55 இரவு 7 மணியள வில் கோணமேடு அண்ணா படிப் பகக் கட்டிடத்தில், தோழர் எஸ் கோபால் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் அண்ணா அவர்களுக்கும், தோழர் ஏ. எல். சி. கிருஷ்ணசாமிக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளப்பட்டது டன், தோழர்கள் இரா. நெடுஞ் செழியன், முல்லை-சத்தி ஆகியோர் களைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டுறவு பால் வினியோக தொழிலாளர் சங்கம்

திருச்சி - சீரங்கம் கூட்டுறவு பால் வினியோகத் தொழிலாளர் சங்க உறுப்பினர் கூட்டம் 23—5—55 பகல் 12 மணிக்கு, திருச்சி புத்தூர் பிஷப் ஹீபர் மைதானத்தில், தோழர் எம். எஸ் மணி தலைமையில் நடைபெற்ற போது, சங்க நிர்வாகிகளாக தோழர்கள் எம். எஸ். மணி தலைவ ராகவும், ப. முனியப்பன் செய லாளராகவும், பி. சண்முகம் துணைச் செயலாளராகவும், வி. ராமு பொருளாளராகவும், செயற் குழு உறுப்பினர்களாக தோழர்கள் எஸ். நடேசன், எம். நடராசன், என். ரத்தினம், எல். ஆறுமுகம், வி. கோவிந்தராஜுலு, ஏ. கூத் தையன், எஸ். சேக் தாவுத் ஆகி யோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மதுரை — மாகாளிப்பட்டி நெடுஞ்செழியன் மன்றம்

25—5—55 காலை 10 மணியள வில், தோழர் கே. ஜி. நீலகண்டன் தலைமையில் நடைபெற்ற வில் மன்ற உறுப்பினர்கள் கூட் டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக் கப்பட்டனர் :— செயலாளர்: சுப. இராமநாதன்; துணைச் செயலா ளர்: சோ. தங்கக்கனி; பொருளா ளர்: எம். கே. தனக்கோடி; செயற் குழு உறுப்பினர்கள்: சோ. அழ கிரி, வி. நல்லமுத்து, எல். புவ நீதன், எம். சேகரன், சோ. நா. வேலன், எஸ். பேச்சிமுத்து, கே. ஜி. நீலகண்டன், த. முத்தையா.

பின்னர், முன்னாள் பொதுச் செயலாளர் அண்ணா அவர்களைப் பாராட்டியும், புதிய பொதுச்செய லாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்றும், நான்காம் ஆண்டு விழா வரவு — செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டும் முடிவுகள் செய்யப்பட்டன.

கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவு படிப்பகம்

22—5—55 இரவு 7 மணிக்கு, சென்னை, வண்ணையம்பதியி லுள்ள கட்டிடத்தில் தோழர் பி. வி. முத்துசாமி தலை மையில் 'இலட்சிய வளர்ச்சி' என்ற பொருள் பற்றி சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

இடமாற்றம்

கடந்த மூன்று ஆண்டு காலமாக மதுரை கீழவெளி வீதியிலிருந்து பணியாற்றி வந்த முத்துப் படிப்ப கம் (தி. மு. க. உட்கிளை) 22-5-55 லிருந்து 5, லட்சுமிபுரம், குறுக்குத் தெரு, 15 எண்ணுள்ள கட்டிடத் திற்கு மாற்றப்பட்டுள்ளது.

திருமணங்கள்

16—5—55 காலை 8 மணிக்கு குஞ்சாண்டியூரில், தோழர் கே. எல். வேலுசாமி தோழியர் தொ. லட்சுமி அம்மையார் திருமணம் தோழர் டி. கே. ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. மண மக்களை வாழ்த்தி தோழர்கள் அ. பாலு, க. கு. சின்னசாமி, இராமகிருட்டிணன் பேசினர். இதன் நினைவாக மணமக்களால் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது – வரப்பெற் றோம்-நன்றி–பொறுப்பாளர்.

* * *

26—5—55ல், சென்னை வில்லி வாக்கத்தை அடுத்துள்ள திருக் கண்முகப்பேர் என்னும் சிற்றூரில், தோழர் ஆ. கிருஷ்ணன் தலைமை யில், தோழர் கே. கபீர்தாசன்— தோழியர் கௌசலை வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர் கள் ப. செ. தூயமணி, இ. எல். மணி, இராதாமணாளன், தில்லை, அழகுவேலர் 'வாழ்த்துரை வழங் கினர். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது – வரப்பெற் றோம்-நன்றி–பொறுப்பாளர்.

பெயர் சூட்டல்

21—5—55 மாலை 6 மணியள வில் சூளை தி மு. க பொதுக் கூட் டத்தில் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தோழர் ஆர். எஸ். நாதன் அவர்களின் ஆண் குழந் தைக்கு 'அதிகமான்' என்று பெய ரிட்டார்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப் பாக அளிக்கப்பட்டது—வரப்பெற் றோம்—நன்றி—பொறுப்பாளர்.

அனுதாபம்

அயன்புரம் 21-வது வட்ட தி. மு க. துணைச் செயலாளர் பி. வி. கேசவன் ஆண் குழந்தை இயற்கை எய்தியமைக்கு மேற்படி வட்ட கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

அறப்போருக்கு 2000 தொண்டர்கள்

2,600 பேர் கைது செய்யப்பட்டதாக தகவல்

'காலனி ஆட்சியின் சின்னம்' ஒழிய இறுதி சந்தர்ப்பம்!

ஆகஸ்டு 15-ந் தேதி யன்று, கோவாவில், பரவலான முறை யில் அறப்போர் நடத்த 2,000 தொண்டர்களை அனுப்புவதற்கு மகாராஷ்டிர மாநில மக்கள் சோஷலிஸ்டு கட்சி முடிவு செய்திருக்கிறதாகச் செய்திகள் கூறுகின்றன.

'விடுதலை இயக்க'த்திற்கு கோவாவில் பலமிக்க ஆதரவு உள்ளதென்றும், இதுவரையில், 2 600 தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளனரென்றும், விடுதலைப் போரின் இறுதிக் கட்டம் ஆரம்பமாகிவிட்டதென்றும், பீட்டர் ஆல்வாரெஸ் கூறியுள்ளார்.

'கண்டவுடன் சுட்டுவிடுக,' என்று, துருப்புகளுக்கு போர்ச்சுகீசிய அதிகாரிகளால் உத்திரவிடப் பட்டுள்ள நபர் இவரேயாகும்.

ஆயுதங்கள் குவிகின்றன!

கோவாவில் கொண்டுவந்து குவிக்கப்படும் நவீன யுத்தத்தளவாடங்களிலும், வெடி மருந்துகளிலும் 'நேட்டோ' (இராணுவ) நிறுவனத்தின் அடையாளங்கள் உள்ளனவென்றும், போர்ச்சுகீசியப் பிரதேசத்தில் ஒரு பெரிய நவீன விமான நிலயத்தை அமெரிக்கக் கம்பெனியொன்று கட்டிமுடித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொண்டர்கள் நுழைவு

28-ந் தேதி விடியற்காலையில், எஸ். பி. லிமாயி தலைமையில் 70 - பேர் அடங்கிய அறப் போர்த் தொண்டர்கள் கோவா எல்லைக்குள் பிரவேசித்துள்ளனராம். மலைகளும் காடுகளும் கொண்ட வழியாக அவர்கள், மேலும் சென்று கொண்டே யிருக்கின்றனராம்.

காலனி ஆட்சியின் சின்னங்கள் அழியும் நேரம்!

"பேச்சு வார்த்தைகள் மூலம் கோவா பிரச்சினைக்கு முடிவு காண்பதற்கு, இந்திய சர்க்கார் மேலும் ஒரு கடைசி முயற்சி செய்ய வேண்டும்; அதில் தோல்வி ஏற்படுமானல், பிரதம மந்திரியின் கொள்கையை அநுசரித்து, தேவையான நிர்ப்பந்த நடவடிக்கைகளை எடுத்து, இந்தியாவிலிருந்து காலனி ஆதிக்கச் சின்னங்களை அடியோடு ஒழித்துக் கட்ட சர்க்கார் முயல வேண்டும்," என்ற, சர்வ கட்சி பார்லிமெண்டரி குழு ஆதரவின் கீழ், கல்கத்தாவில் நடைபெற்ற 2-வது கோவா தேசிய மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

8 ஆண்டு தண்டனை — நாடு கடத்த உத்தரவு

மாபுகா எனும் பகுதியில், ஜன 26-ந் தேதி யன்று அறப்போர் நடத்திய இரு தொண்டர்களுக்கு கோவா இராணுவ கோர்ட்டால், மார்ச் 23-ந் தேதி யன்று, தலா, 8 ஆண்டு சிறைத் தண்டனையும தினம் 10 எஸ்குடாஸ் (போர்ச்சுகீசிய நாணயம்) வீதம் 2-ஆண்டுகளுக்கு அபராதமும், தண்டனை காலம் முடிந்ததும், கோவாவிலிருந்து அவர்களை வெளியேற்றும் படியும் உத்திரவிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் லால்குடி வருகை

★

2—6—55 மாலை 6 மணிக்கு, லால்குடி சிவன் கோவில் முன்பு, பொதுச்செயலாளர் வரவேற்புப் பொதுக்கூட்டம், தோழர் அன்பில் தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் எம். எஸ். மணி ஆகியோர் பேசுவர்.

தேனி தி. மு. கழக தேர்தல்

★

1—6—55 மாலை 3 மணிக்கு, தேனி தி. மு. கழக தேர்தல் தேனியில், மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். முத்து தலைமையில் நடைபெறும். மத்திய தி. மு. கழக உறுப்பினர்கள் யாவரும் கலந்துகொள்ளும்படி கேட்டுக் கோள்ளப்படுகிறார்கள்.

நாஞ்சில் மாவட்ட தி. மு. க. தோழர்கட்கு

"வெகு விரைவில் தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாடு திருச்சியில் நடைபெறவிருக்கிறது. பேரூரில் நடைபெற்ற பொதுக் குழுவின் முடிவிற்கிணங்க, ஒவ்வொரு மாவட்டமும், மாநில மாநாட்டு ஆரம்பச் செலவினங்களுக்காக ரூ. 2,000 கோடுக்க வேண்டும். நமது மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்கள் அதற்கான பணியில் ஈடுபட்டுள்ளன. கழகக் கட்டுப்பாட்டிற்கிணங்க, நாமும் நமது பங்கைச் செலுத்தியாக வேண்டும்.

"எனவே, இதைப்பற்றி பரிசீலனை செய்ய 3—6—55 பிற்பகல் 3-30 மணிக்குக் கழக அலுவலகத்தில் மாவட்டச் செயற் குழு கூடவிருப்பதால், மாவட்டப் பிரதிநிதிகளும், கிளைக் கழகச் செயலாளர்களும் தவறாது வருகை தந்து தங்களது ஆலோசனைகளைத் தருமாறு பணிவன்போடு வேண்டுகிறேன்,"

என்று, நாஞ்சில் மாவட்ட தி மு. கழகச் செயலாளர் தோழர் வி எம் ஜான் அறிவிக்கிறார்.

கழகக் கூட்டங்கள்

★

வைரிசெட்டிப்பாளையம்
மாரியம்மன் கோயில் முன்பு
1—6—55 மாலை 6½ மணிக்கு
தலைவர்: ச. கணபதி
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
அன்பில் தர்மலிங்கம்

★

பத்தநல்லூர் (குத்தாலம்)

31—5—55 மாலை, தோழர் சோ. வரதராசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. அறிவழகன், பொ. சோ. மணி, தருமன், அறிவுடைநம்பி ஆகியோர் பேசுவர்.

அன்பழைப்பு

தோழீர்,

2—6—55 காலை 8½ மணியளவில், சேலம் டவுன், நெ. 1 புதுத் தெரு, 30-ம் எண்ணுள்ள இல்லத்தில், சேலம் தோழர் எசித்தையன் தலைமையில், தோழியர் தனலட்சுமி அம்மையை என் வாழ்க்கைத் துணைவியாக ஏற்கும் தமிழ்த் திருமண விழாவிற்கு வந்திருந்து சிறப்பிக்க அனைவரையும் அன்போடு அழைக்கிறேன்.

சி. வி. இராசன்,
[illegible]

****

திருமண அழைப்பு

அன்புடையீர், வணக்கம்

1955-ம் ஆண்டு ஜூன் திங்கள் 1-ம் நாள் புதன் கிழமை காலை 8-மணியளவில், மன்னார்குடி சிங்காரவேலு உடையார் தெரு, 12-ம் எண்ணுள்ள இல்லத்தில், தோழியர் விஜயலட்சுமி அவர்களை எனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ளும் திருமண விழா நடைபெற இருக்கிறது. அதுபோது தாங்கள் வருகை தந்து, விழாவைச் சிறப்பு செய்து, எம்மை மகிழ்விக்க வேண்டுகிறேன். இதையே அன்பழைப்பாகக் கொள்ள வேண்டுகிறேன்.

அன்பன்,
ப. வேலாயுதம்

****

டி. டி. கே.-யின் ஆசை நிறைவேறுகிறது!

இரும்பு எஃகு உற்பத்திக்கென புது இலாகா

புதுடில்லி, மே 30 —

'இரும்பு எஃகு உற்பத்திக்கு' என்று, ஒரு புதிய இலாகா உருவாக்கப்பட்டு, அதன் நிர்வாகப் பொறுப்பு வர்த்தக தொழில் இலாகா மந்திரியான டி. டி. கிருஷ்ணமாச்சாரியிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக குடியரசுத் தலைவரின் உத்தரவு ஒன்று கூறுகிறது.

ஆறு மாதங்களுக்கு முன்பிருந்தே, 'விலகி விடுவேன்' என்ற நாடகத்தை ஆடிவந்த டி டி. கிருஷ்ணமாச்சாரியாரைத் திருப்திபடுத்தவே இந்த புதிய ஏற்பாடு என்று கூறப்படுகிறது.

ஜெர்மன் கம்பெனியால் ஆரம்பிக்கப்பட்டுள்ள ரூர்கேலா தொழிற்சாலை, ரஷ்யர்களால் துவங்கப்பட்டுள்ள பிலாய் தொழிற்சாலை, மற்றும், பிரிட்டிஷாருடன் மேற்கு வங்கத்தில் உள்ள துர்கா பூரில் துவங்குவதற்காக பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வரும் தொழிற்சாலை ஆகியவற்றின் நிர்வாகத்தை, இதுநாள் வரை உற்பத்தி இலாகா கவனித்து வந்தது.

இப்போது இந்த மூன்று தொழிற்சாலைகளின் நிர்வாகமும், இரும்பு எஃகு இலாகாவிற்கு மாற்றப்படுமாம்.

மேலும், இப்போது, வர்த்தக, தொழில் இலாகா பொறுப்பிலிருக்கும், கிராம, குடிசைத் தொழில்கள், உற்பத்தி இலாகாவின் பொறுப்பிற்கு மாற்றப்படும் என்றும் தெரியவருகிறது.

இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெறும் கட்டுக்கதை; அந்த எண்ணம் தவறானது என்பது, ஜப்பானிலும், இதர தொழில் மயமான நாடுகளிலும் நிருபிக்கப்பட்டிருக்கிறது.

—என்று சென்னை சர்க்கார், தொழில் திட்டம் பற்றி யோசனை கூற நியமித்த குழு குறிப்பிட்டிருக்கிறது.

குழுவில், அதிகாரப்பற்றற்ற பல தொழில் துறையினரும் இடம் பெற்றிருந்தனர்.

அவர்கள், சுமார் 200 கோடி ரூபாய் செலவில் தனியார் துறையில் தொழிற்திட்டங்கள் வேண்டும் எனறும், அதில், 100 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் கடனாகத் தரவேண்டும் என்றும், எஞ்சிய 100 கோடி ரூபாயை தனிப்பட்ட முதலாளிகள் போடுவர் என்றும் தெரிவித்துள்ளனர்.

அவர்கள், தனியார் துறையில் துவங்கக்கூடிய பல தொழில்கள் பற்றியும் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

ஈடன் சந்திக்கும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சின் டிரைவர்கள் முதலான தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவிட்டனர்.

சுமார் நான்கு லட்சம் உறுப்பினர்கள் கொண்ட பிரிட்டன் தேசிய இரயில்வே தொழிலாளர் சங்கத்தின் தலைவர்கள்கூட நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டிருந்தும் தோல்வியையே கண்டிருக்கின்றனர்.

ஏறத்தாழ 5-ல் 4 பகுதி இரயில்கள் ஓட்டப்பட முடியாது என்றும், அழியக் கூடிய பொருள்களும், மருத்துவ வசதிகளும் மட்டுமே இப்போதுள்ள வசதிகளைக் கொண்டு ஓரிடத்திலிருந்து மற்றொரிடம் எடுத்துச் செல்லப்பட முடியும் என்றும் கூறப்படுகிறது

ஈடன் எச்சரிக்கிறார்!

"உலகத்தில் போட்டி வலுத்து வரும் இக்காலத்தில், இந்த வேலை நிறுத்தத்தினால் பிரிட்டிஷ் தொழில்களுக்குத் தீங்கு நேரிடும்; இப்பிரச்சினையில் சம்பந்தப்படாத தொழிலாளரிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பரவக்கூடும்," என்று அந்தோனி ஈடன் எச்சரித்துள்ளார்.

3-மாத அவகாசம்?

தங்கள் சம்பள உயர்வுக் கோரிக்கையைப் பரிசீலித்து முடிவுசெய்ய 3-மாத அவகாசம் கொடுப்பதற்குத் தாங்கள் தயாராயிருப்பதாக இரயில்வே தொழிலாளர்கள் அறிவித்துள்ளனராம்.

டாக்டரின் கவனக் குறைவிற்கு!

ஒரு தொழிலாளி பலியானார்

கல்கத்தாவில் உள்ள ஒரு வைத்தியசாலையில் கத்தியால் குத்தப்பட்ட ஒரு தொழிலாளியின் வயிறு டாக்டரால் ஆப்ரேஷன் செய்து முடிவுற்ற பிறகு, அத்தொழிலாளி இறந்துவிட்டான்.

சவப் பரிசோதனை செய்து பார்க்கையில் அவன் வயிற்றில் 16 அங்குலம் நீளமும், 10 அங்குலம் அகலமும் உள்ள ஒரு துண்டுத் துணி காணப்பட்டது.

ஆப்ரேஷன் செய்த டாக்டரும், அவருக்கு உதவியாயிருந்தவர்களும் கவனக் குறைவால் அத்துணியை வயிற்றுக்குள்ளேயே வைத்துவிட்டனர் எனத் தெரிகிறது.

இது சம்பந்தமாக விசாரணை செய்த மாஜிஸ்திரேட் ஆப்ரேஷன் செய்த டாக்டரையும், அவருக்கு உதவியாயிருந்தவர்களையும் பலமாகக் கண்டித்து எச்சரிக்கை செய்தார்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள 12 தொழிலாளர்கள் கைது!

எட்டயபுரம் அருகே நிகழ்ச்சி

ஊதியத்தை உயர்த்துமாறு கோரிக்கை

எட்டயபுரம், மே 26—

தாளையூத்தில் உள்ள இந்திய சிமெண்ட் தொழிற்சாலைக்கு கற்கள் 'சப்ளை' செய்யும், ராமனூத்தனுப்பிடத்தில் உள்ள சிப்சன் கம்பெனியைச் சேர்ந்த சுமார் 150 தொழிலாளர்கள், தங்களுக்குத் தரப்படும் மிகக் குறைவான ஊதியத்தை அதிகப்படுத்தக் கோரியும், தங்களில் சிலரை வேலையிலிருந்து நீக்கியதை எதிர்த்தும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிய வருகிறது.

இடங்கிலிருந்து கல் ஏற்றிச் சென்ற 'லாரி' ஒன்றைத் தொழிலாளர்கள் தடுத்து நிறுத்த முயன்ற போது, போலீசார் குறுக்கிட்டு, 12 பேர்களைக் கைது செய்ததாயும் கூறப்படுகிறது.

ஒரு கம்யூனிஸ்டு தொழிற் சங்கவாதி உட்பட அந்தப் பன்னிரண்டு பேர் மீதும் போலீசாரால் வழக்குத் தொடரப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

கல்லூரிகளில் போதனை மொழியாகத் தமிழ்

அண்ணாமலை நகர், மே 27—

சென்னை மாநிலத்தில் உள்ள கல்லூரிகள் உட்பட பல கல்வி நிறுவனங்களிலும் போதனை மொழியாகத் தமிழ் மொழியை நிர்ணயிப்பது பற்றி விவாதிப்பதற்காக ஜூன் 18-ந் தேதியன்று சென்னையில் நடைபெறும் மாநாடு ஒன்றில் கலந்துகொள்ள வருமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டி. எம். நாராயணசாமி, தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் ஏ. சிதம்பரநாதன் மற்றும் ஒரு சிண்டிகேட் உறுப்பினர் ஆகியோரை சென்னை கல்வி மந்திரி சி. சுப்பிரமணியம் அழைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

பிரிட்டிஷ் தேர்தல்

இறுதி கட்சி பலம்

பிரிட்டனில் நடைபெற்ற பொது மக்கள் சபைத் தேர்தலில் எல்லாவற்றிற்கும் முடிவு தெரிந்துவிட்டது.

கட்சிகள் போட்டியிட்ட மொத்த இடங்கள்:—

கன்சர்வேடிவ்:	624
தொழிற் கட்சி:	620
மிதவாதிகள் (லிபரல்):	110
கம்யூனிஸ்டுகள்:	17
உதிரிகள்:	38

கட்சிகள் கைப்பற்றிய மொத்த இடங்கள்:—

கன்சர்வேடிவ்:	345
தொழிற் கட்சி:	277
மிதவாதிகள் (லிபரல்):	6
கம்யூனிஸ்டுகள்:	0
உதிரிகள்:	2

முன்பிருந்த ஐரிஷ் தொழிற் கட்சி, தேசியவாதிகள் கட்சி இப்போது தோற்றுவிட்டன.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறு கிறது. ஆசிரியர்: இரா, நெடுஞ்செழியன், எம். ஏ.